Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 72

யாழ்ப்பாணம் சித்திரை 12 ஸபர் 28 ஞாயிற்றுக்கிழமை (25-4-71)

நவநாகரிக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி 'இரத்தினம்ஸ்'
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## காடுகளில் மறைந்திருக்கும் பயங்கரவாதிகள்

# சரணடையாவிட்டால் கடும் ராணுவ தாக்குதல்

## பிரதமர் விடுத்துள்ள எச்சரிக்கை

கோட்டை, சனி

**"சரணடையுங்கள் இன்றேல் கடுமையான ராணுவ தாக்குதலுக்கு உத்தரவிடவேண்டிய நிலைமை ஏற்படும்"**

**இவ்வாறு பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பயங்கரவாதிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவளித்து வருபவர்களுக்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.**

இன்றுகாலை நாட்டுமக்களுக்கு பிரதமர் விடுத்த வானொலிச் செய்தியொன்றிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்தார். சரணடையும் பயங்கரவாதிகள்மீது வன்செயல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

### ஆயுதங்கள் கொடுத்த நாடுகள்

பயங்கரவாதிகளின் தாக்குதல்களை சமாளிப்பதற்கு ஆயுதங்கள் கொடுத்துதவிய இந்தியா பிரிட்டன் அமெரிக்கா சோவியத்யூனியன் யூகோஸ்லாவியா ஐக்கிய அரபுக் குடியரசு பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்

புனர் நிர்மாணத் திட்டங்களுக்காக மக்களை சிறிது காலத்துக்காவது தியாகங்கள் புரிய முன்வருமாறு அவர் கேட்டுக்கொண்டார்

பிரதம மந்திரி நிகழ்த்திய வானொலி உரையின் விபரம் வருமாறு:-

அன்புள்ள எனது நாட்டு மக்களே!

கடந்த இரு வாரங்களாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் சம்பவங்களை நீங்கள் அறிவீர்கள். இச்சம்பவங்கள் ஏன் நடைபெறுகின்றன. இதற்கு யார் பொறுப்பு? இதன் விளைவு என்ன? என்பது பற்றி இந்நாட்டில் வாழும் சரியாக உணரும் ஒவ்வொரு பிரஜையும் சிந்திக்கவேண்டிய பிரச்னையாகும். பல்வேறு கட்டங்களில் பல்வேறு முறையில் சில விஷமத்தனமான செய்திகளையும் ஹேஸ்யங்களைக் கூறியும் வீண் சம்பவங்களை ஏற்படுத்தி வருகின்றன.

நான் உங்கள் பிரதமர் என்பதனாலும் இந்நாட்டின் பாதுகாப்பில் பொறுப்பு மிகக் கொண்டவராகையாலும் இவ்விஷயங்களை நான் சரியாகத் தெரிந்திருக்கிறேன்.

### தற்செயல் அல்ல

ஏப்ரல் மாதம் 4-ம், 5-ந் திகதிகளில் ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் பொலிஸ் நிலையங்களைத் தாக்கிய சம்பவங்களை ஒரு தற்செயல் நிகழ்ச்சி எனக் கருதிவிடமுடியாது. அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்கு திட்டமிட்டு செய்யப்பட்ட முயற்சியேயாகுமிது.

நாட்டில் வன்முறைச் சம்பவங்களைத் தூண்டும் நிகழ்ச்சிகள் இரகசியமாக நடைபெறுகிறதென்பதை புலன்விசாரணையில் கண்டுகொண்டு அதற்குக் காரணமான சிலரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்தமையால் பயங்கரவாதிகளால் திட்டமிட்ட முறையில் செயற்பட முடியாமல் போய்விட்டது. கொழும்பு, கண்டி ஆகிய நகரங்களிலுள்ள அரசாங்கக் கட்டிடங்களையும், பனாகொடை இராணுவ முகாம் மீதும் தாக்குதல் நடத்த சர்வகலாசாலை மாணவர்களைத் தயார்படுத்தியிருந்தனர். இத்தாக்குதல் சம்பவங்களை முன்பே பாதுகாப்புப் படையினர் உணர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டமையால் பயங்கரவாதிகள் தமது முயற்சிகளைக் கைவிடவேண்டி ஏற்பட்டது.

### கொழும்பில் தவறினர்

கொழும்பிலுள்ள தலைமை நிலையங்களைத் திட்டமிட்டபடி பயங்கரவாதிகள் கைப்பற்றத் தவறிவிட்டமையும், அதனால் மற்றவர்கள் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பது அவர்களுக்கு அறிவிக்கப்படாமையால் இப்பயங்கரவாதிகளின் திட்டங்கள் செயல்பட முடியாமல் போய்விட்டன. இதனால் பெரியதும் சிறியதுமான பொலிஸ் நிலையங்களை இராணுவம் மீட்க முடிந்தது. பயங்கரவாதிகள் உணவுப் பொருட்களை பங்கீடுசெய்ய முடியாமல் செய்வதற்கு பல தடைகளை ஏற்படுத்தினர். இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக நிலைகளைவிட்டு பயங்கரவாதிகள் காடுகளுக்குள் சென்று மறைந்துள்ளனர். கேகாலை, ஹக்கல, அனுராதபுரம் ஆகிய இடங்களில் செயல்பட்டுவந்த பயங்கரவாதிகள் அப்பகுதிகளைச் சுற்றியுள்ள காடுகளுக்குள் தலைமறைவாகியுள்ளனர். எல்பிட்டியாவிலும் இதே போல் மறைந்துள்ளனர். இவர்களை அங்கிருந்து வெளிப்படச்செய்து கைது செய்யும் முயற்சியில் பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர். பயங்கரவாதிகளுக்கு ஆயுதப்பற்றுக்குறை உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதினால், துப்பாக்கி முனையில் குடிமக்களிடமிருந்து உணவுப் பொருட்களையும் மற்றும் பொருட்களையும் தட்டிப்பறிக்க முயற்சி செய்கின்றனர். அவர்கள் பாதைகளையும், மதகுகளை

4-ம் பக்கம் பார்க்க



**ஊரடங்கு நேரம்**
**இன்று மாலை 6-30 மணி முதல் நாளை காலை 5-30 மணி வரை**

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
டொலர் அலுமினியம்
ONE-DOLLAR

## டெனியாய பிரதேசம் அரசாங்க கட்டுப்பாட்டில்!

கோட்டை ஞாயிறு

டெனியாய பிரதேசத்தை பாதுகாப்புப் படையினர் முற்றாக அரசாங்கக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது இத்தாக்குதலின் போது பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது

நேற்றுமாலை 2-30 மணியளவில் பாதுகாப்புப் படையினர் டெனியாயபிரதேசத்துக்குள் புகுந்து பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தற்போது டெனியாய பகுதி முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கத்தா பாக். தூதரகம் மூடப்படும்

# கி. பாக். அகதிகளுக்கு உதவ ஐ. நா.விடம் பாரதம் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 23

கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் துணைத்தூதரகத்தை பாகிஸ்தான் மூடுகிறது. டாக்காவில் இருக்கும் இந்தியத் தூதரகத்தை மூடுமாறு இந்திய அரசை பாகிஸ்தான் அரசாங்கம் கேட்டுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு நிவாரண உதவி அளிக்குமாறு ஐ. நா. ஏஜன்சிகளை இந்திய கேட்டுள்ளதாக இந்தியவானொலி தெரிவித்தது.

கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தான் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு இதுநாள் வரை 2 1/2 லட்சம் கிழக்கு வங்காள மக்கள் இந்தியாவிற்கு அகதிகளாக வந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரண உதவி அளிப்பது இந்திய அரசினால் மட்டும் இயலாத காரியம். ஆகவே ஐ. நா. ஏஜன்சிகள் இவர்களுக்கான நிவாரணம் வழங்க முன்வர வேண்டும் என ஐ. நா.விலுள்ள இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திரு சமர்சென் ஐ.நா. விடம் இந்திய அரசின் வேண்டுகோளைத் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொதுக் காரியதரிசி ஹான்ட் ஆகியோரைச் சந்திக்கவிருக்கிறார்.

## பிரிட்டிஷ் எம். பி. கருத்து

வியட்நாமில் ஒரு 'மைலாய்ப்' படுகொலை நடந்ததற்கு உலகம் முழுவதும் கொந்தளித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தது. ஆனால் கிழக்கு வங்காளத்தில் பல 'மைலாய்ப்' படுகொலைகள் நடைபெறவும் அவ்வுலகம் அமைதியுடன் இருக்கிறதென பிரிட்டிஷ் தொழிற்கட்சி எம். பி. திரு டட்லிமான் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், கிழக்கு வங்காள மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் இந்தியாவிற்குள் அகதிகளாக வந்து சேர்ந்துள்ளனர். அவர்கள் எல்லோருக்கும் இந்தியா நிவாரணம் அளிக்கும் நிலையில் இல்லை. எனவே அகதிகளுக்கு நிவாரணம் அளிக்க உலக ஸ்தாபனங்களும் நாடுகளும் முன்வர வேண்டும் என்று கூறிய அவர், பாகிஸ்தான் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாகச் சாட்டப்படும் குற்றச்சாட்டை மறுத்தார்.

## தூதுவராலயம் மூடப்படும்

கல்கத்தாவில் இருக்கும் பாகிஸ்தான் துணைத் தூதுவராலயத்தை மூடுவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இது திங்கட்கிழமை மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தூதுவராலய உதவி ஸ்தானிகர் தனது தூதுவராலயம் பாகிஸ்தான் தூதுவராலயமாக இனிமேல் இயங்காதென்றும் அது வங்காள தேஷின் தூதுவராலயமாகவே இனிமேல் இயங்குமென்றும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த தூதுவராலயத்தை மூடுவதாக முடிவு செய்த பாகிஸ்தான் அரசு டாக்காவிலுள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தையும் மூடுமாறு இந்திய அரசைக் கோரியுள்ளது. இந்தத் தூதுவராலயத்தில் கடமையாற்றும் சில அதிகாரிகளையும் குடும்பத்தினரையும் இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கு காட்மாண்டிலிருந்து டாக்காவிற்கு விமான மொன்றை அனுப்புவதற்கு இந்தியா பாகிஸ்தான் அரசிடம் முன்பு அனுமதி கோரியிருந்தது.

## ரஷ்யா மீண்டும் கடிதம்

சோவியத் யூனியன் பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக ராவல்பிண்டியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. இக்கடிதம் சோவியத்யூனியனால் கிழக்கு வங்காள நிலைமை பற்றி அனுப்பப்படும் இரண்டாவது கடிதமாகும்.

இக்கடிதத்தை சோவியத் பிரதமர் கொசிஜின் அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிகிறது. முதலாவது கடிதத்தை அதிபர் பொட்கொர்னி அனுப்பி வைத்திருந்தது தெரிந்ததே.

இக்கடிதம் பற்றிய விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் கிழக்கு வங்காளத்தில் சமாதானமான அரசியல் தீர்வுகாண வேண்டும் என்பதையும், ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்திற்கு ஏற்பவே சோவியத் யூனியன் இவ்விஷயத்தில் தலையிடுகிறதென சோவியத் உயர்மட்ட அதிகார பீடம் கருதுவதையும் இக்கடிதத்தில் வலியுறுத்தியிருக்கக் கூடுமென விஷயமறிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## அங்கீகரிக்கக் கோரிக் கடிதம்

அண்மையில் கிழக்கு வங்காளத்தில் அமைக்கப்பட்ட சுதந்திர வங்காளக் குடியரசை உலக நாடுகள் அங்கீகரிக்கக் கோரும் கடிதங்களை பல நாடுகளுக்கும் அவர்கள் அனுப்பிவருகின்றனர்.

## அறிஞர்கள் குற்றச்சாட்டு

டாக்காப் பல்கலைக் கழகத்திலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும் மாணவர்களையும் முன்பே திட்டமிட்டபடி பாகிஸ்தான் இராணுவத்தினர் கொலை செய்ததாக 10 நாட்டு அறிஞர்கள் ஒன்றாக விடுத்த அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விடுதலை வீரர்கள் இப்பொழுது கொரிலாப்போர் முறையில் பாகிஸ்தான் இராணுவத்தினரைத் தாக்கிவருகின்றனராம். ஒரு கிராமத்தில் மட்டும் 10 ஆயிரம் கிராமமக்கள் கொல்லப்பட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது. இப்பொழுது விடுதலை வீரர்கள் மக்களுக்குக் கொரிலா முறைப் பயிற்சி அளிப்பதற்கென 12 கொரிலாப் பயிற்சி முகாம்களை அமைத்துள்ளனர். 20 சதவீதமான மக்கள் டாக்கா நகரிலிருந்து வெளியேறியுள்ளதாக இந்திய வானொலி தெரிவித்தது.

கிழக்கு வங்காளத்தின், கிழக்கு, வடக்கு, தெற்கு அரங்குகளில் கடும் சண்டைகள் நடைபெறுவதாக செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவரகத்தில் கடமையாற்றிய தூதுவரக இரண்டாவது காரியதரிசியும் செய்தித்துறைக்காரியதரிசியும் இந்தியாவிடம் அரசியல் தஞ்சம் அடைந்தது வாசகர்கள் அறிந்ததே. அவர்களை பாகிஸ்தான் அரசுப் பிரதிநிதி ஒருவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த அனுமதிக்குமாறு பாகிஸ்தான் அரசு இந்தியாவிடம் கோரியுள்ளதாம்.

## 40 அதிகாரிகள்

கராச்சி, ஏப். 24

இன்று முஜிபூர் நகரில் சுதந்திர வீரர் திரு முஜிபூர் ரஹ்மான் ஆட்சியின் கீழ் நாற்பது அதிகாரிகள் சேவை செய்ய சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டதாக யூ பி ஐ செய்தி கூறுகிறது.

## விற்பனைக்கு

ஆயர்பாடி சோதிடர் தரும் இராசிப்பலன் வெளிவந்துவிட்டன. உங்களின் அரிய துணைவன். இன்றே உங்களின் இராசிக்குரிய புத்தகம் ஒன்று ரூபா 1-20 கொடுத்து வாங்குங்கள் இதில் உங்களுக்குவேண்டிய சகல நன்மைகளும் வழிவகைகளும் தந்துள்ளனர். வே. த. மயில்வாகனம், ஆயர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 2763

## இரும்புப் பெட்டி:

இறக்குமதி செய்த ஜேர்மன் தேச 2 1/4 அடி பெட்டி ஆறு லிவர் பூட்டுகள், நெருப்புப் பாதுகாப்புக் கொண்டது. ஸ்டான்டுடன் விற்பனைக்குண்டு. சுந்தரம் பிறதர்ஸ், மருந்துக்கடை, 73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 2772

## தேவை

கடதாசிப் பொருட்கள் உற்பத்தி செய்யும் ஸ்தாபனத்தில் படிப்பு அற்றவர்கட்கு வேலை வசதி உண்டு. பை ஒட்டும் அனுபவம் உள்ளோர்க்கு விசேஷ சலுகை உண்டு. நேரில் மனுச்செய்யவும். கி. ஆர். எஸ். என்டர்பிரைசஸ், 390, 392, பருத்தித்துறை வீதி, அரசடி, யாழ்ப்பாணம். 2771

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப.1-30
சிவாஜி கணேஷன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப 1-15
மாஸ்டர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

6-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி.ப.1-30
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

அடுத்த வெளியீடு
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனோகர், அசோகன், ஆனந்தன்
நாகேஷ், சுந்தரராஜன்
நடித்த
ஜெயகா பிக்சர்ஸ்
மூன்றெழுத்து
(மர்மச்சித்திரம்)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
காலை 10-30, பி.ப. 2-00
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
கலங்கரை விளக்கம்


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - K. R. விஜயா நடித்த
தங்கை

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 10-00, 1-30 மட்டும்
ஏ. வி. எம். ராஜன் — சாரதா நடித்த
துலாபாரம்

ராஜா (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி. ப 1-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
மாடப்புறா
(புதிய கொப்பி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
தினசரி பி. ப. 1-45
சிவாஜி — ஜெய்சங்கர் சரோஜாதேவி நடித்த
அன்பளிப்பு

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-30 மணி
ரஞ்சன் — அசோகன் நடித்த
கப்டன் ரஞ்சன்

SONY® 2R-29
TEAM


ஸோனி பாக்கெட் ட்ரான்சிஸ்டர் ரேடியோ
சிடில்ஸ் சினிரேடியோ
9, 10, கொன்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி 27311
கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எதிரிகளுக்கு உதவுவதுதான் மேயரின் வழக்கமாகும்'

## சபையில் உறுப்பினர்கள் பாராட்டு

( சபை நிருபர் யோகி )

யாழ்ப்பாணம், ஞாயிறு "1970ம் ஆண்டு ஆட்சி மன்றத் தேர்தலில் ஓர் அபேட்சகராக நின்ற காரணத்தினுல் 23 வட்டாரங்களிலும் உள்ளவர்கள் உங்களுக்கு வாக்களித்திருப்பார்கள். அதனை ஆதாரமாகக் கொண்டு சகல வட்டாரங்களுக்கும் பாகுபாடின்றிப் பணியாற்றவேண்டும்."

யாழ்ப்பாண நகரத்தின் புதிய மேயராக திரு துரையப்பா தெரிவுசெய்யப்பட்டதைச் சபையில் பாராட்டிப் பேசிய திரு. கே. வி. தெய்வேந்திரன் மேற்கண்டவாறு கூறினுர்.

மேயர் திரு. துரையப்பா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. தெய்வேந்திரன் மேலும் கூறியதாவது: ஒவ்வொரு வட்டாரத்திற்கும், அந்தந்த வட்டார உறுப்பினரை மேயர் கூட்டிச்சென்று தேவைகளை நேரில் அறிந்து அதனைத் தீர்த்துவைக்கவேண்டும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கூறியதாவது: நானும், நீங்களும், திரு. தம்பு கந்தையாவும் வரி கூட்டியதை எதிர்த்துப் போராடினேம். வரி உயர்வினுல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றுர்கள். ஏழை மக்கள் வாழ்க்கை நடத்தமுடியாமல் திண்டாடுகிருர்கள் இதை நன்ருக அலசி ஆராய்ந்து சலுகைசெய்யவேண்டும் உங்களுக்கு ஆதரவாக வாக்களிக்காத உறுப்பினர்களின் வட்டாரத்திற்கு நீங்கள் கூடிய சேவை செய்ய வேண்டும். அவற்றை நாங்கள் ஆட்சேபிக்கமாட்டோம்

நான் தமிழ்க்காங்கிரஸ் தீவிரவாதிகளில் ஒருவன். அப்படியிருந்தும் திரு. துரையப்பாவுக்கு எனது ஆதரவைக் கொடுத்ததற்குக் காரணமுண்டு. கடந்த மாதம் 4ந் திகதி எனது வட்டார மக்கள் கூடி ஆராய்ந்து அரசாங்கத்தில் சேரும்படி திரு அருளம்பலத்திடம் கூறினேம். அரசாங்கத்தில் சேர்ந்திராவிட்டால் இந் நாட்டில் இனக்கலவரம் ஏற்பட்டிருக்கும். இதைத் தடுத்தவர் நமது தலைவர் அருளம்பலந்தான். அன்று முதல் அரசாங்கத்திற்குச் சார்பான ஒருவரை மேயராக்குவதற்கு எனது ஆதரவை வழங்க முடிவுசெய்தேன். அரசாங்கத்துடன் சேர்ந்து போகாவிட்டால் நாங்கள் மிகவும் கஷ்டப்படுவோம். 3 காங்கிரஸ் எம். பி.க்களுடன் சேர்ந்து அரசுடன் ஒத்துழைத்து நகரை முன்னேற்றுங்கள்.

திரு. எம். எஸ் பேமின்பநாயகம் கூறியதாவது:

யாழ்ப்பாண நகரம் திரு. துரையப்பாவினுல் முன்னேற்றமடைந்தது மேயரின் வட்டாரத்தில் வேலைகள் நடக்கவில்லை அவ்வட்டார மக்களே இதைப் பற்றி என்னிடம் கூறியிருக்கிருர்கள். ஆதலால் அவரின் வட்டார வேலைகளைச் செய்யவேண்டும். எதிர்த்தவர்களுக்குக் கூட நன்மை செய்வதுதான் அவரின் வழக்கம். இனிமேல் அவரை ஆதரித்தவர்கள் கெஞ்சவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவரை எதிர்த்து வாக்களித்தவர்களின் வட்டாரங்களை அவர் புறக்கணிக்க மாட்டார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்

திரு என். அந்தோனிப்பிள்ளை போதிய மேலதிக வாக்குகளால் நீங்கள் மேயராக தெரிவுசெய்யப் பட்டிருக்கிறீர்கள் கட்சி பேதமின்றி தனிப்பட்ட குரோதமின்றி, உங்களுக்கு ஒத்துழைப்பு தந்து இந்த நகரத்தை முன்னேற்றுவது எங்கள் கடமையாகும் எனது பாராட்டை தெரிவித்து கொள்ளுகிறேன்.

எம் ஏ சி எஸ் ஏ காதர்: நீங்கள் மேயராக வந்திருப்பதை கேட்கும் முஸ்லிம் மக்கள் பெரும் மகிழ்ச்சியடைவார்கள். இலங்கையின் இரண்டாவது தலைநகரான யாழ்ப்பாணத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. உங்களை மேயராக்க முயற்சித்தோம் இரண்டாம் தடவை தவறினேம். 3ம் தடவை எங்கள் விருப்பம் நிறைவேறியது முன்னுள் மேயர்கள் நடத்த மாதிரி பாகுபாடு காட்டக்கூடாது.

திரு தெய்வேந்திரன்: மேயர்கள் என்று சொல்லக்கூடாது. மேயர் என்று சொல்லவேண்டும்

ஜனுப் காதர்: முஸ்லிம் மக்கள் எதிர்பார்த்தது இன்று நிறைவேறி விட்டது. யாழ் நகரமே இன்று மகிழ்ச்சியடைந்துள்ளது.

திரு கே எஸ் நடராசா: யாழ் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர் மேயராக வந்திருக்கிருர். அரசாங்க கட்சியை சேர்ந்த ஒருவர். மேயர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிருர். கூட்டணி பிரமுகர் ஒருவர் நாட்டிற்கு நன்மைசெய்ய வந்திருக்கிருர். அரசாங்கத்தின் உதவிகளை பெற்று இந் நகரத்தை ஒரு பொன்நகரமாக்கவேண்டும். பாகுபாடின்றி சகல வட்டாரங்களுக்கும் தொண்டாற்ற வேண்டும்.

ஜனுப் எம் ஜி பஸிர்: கூட்டரசாங்கத்தை சேர்ந்த ஒருவரை மேயராக்க கடந்த இரண்டரை வருடமாக முயற்சித்தோம் இன்றுதான் அது கைகூடியது. யாழ்ப்பாண மக்கள் முன்னேற்றம் கருதி உறுப்பினர்கள். அவரை மேயராக்கியிருக்கிருர்கள். மேயர் காரியாலயத்தில் உள்ள 'பாபர் சலூன்' கதவை உடனே அகற்ற வேண்டும். இது பொது மக்களுக்கும் மேயருக்கும் தடையாக இருக்கிறது.

மேயர்; (கமிஷனரிடம்) அந்தக்கதவை உடனே அகற்ற ஒழுங்கு செய்யுங்கள். அந்தக் கதவு அகற்றப்பட்டு விட்டது.

ஜனுப் பஸிர்: நீங்கள் மேயராக வந்ததையிட்டு முஸ்லிம் மக்கள் பெரும் மகிழ்சியடைவார்கள். வரியிறுப்பாளர்களின் கஷ்டங்களைத்தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. என். ரி செல்லத்துரை: நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போதும் மேயர் தெரிவிலும் நான் நடுநிலைமை வகித்தேன். அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டியது என் கடமை. கடந்த காலத்தில் சில ஊழல்கள் நடந்ததோடு வட்டாரங்கள் புறக்கணிக்கப்பட்டன. அதனுல்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது நடுநிலைமை வகித்தேன். நான் எனது மனதில் நினைத்து வந்தவர் இன்று மேயர் போட்டிக்கு நிற்கவில்லை. அதனுல்தான் நடுநிலைமை வகித்தேன் மேயர் பாகுபாடு காட்டாது சகல வட்டாரங்களையும் முன்னேற்றவேண்டும் உறுப்பினர்களை அன்பாக மதிக்கவேண்டும்.

திரு ரி. எஸ். துரைராஜா: நீங்கள் மேயராகத் தெரிவு செய்யப்பட்டதற்கு எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன் நீங்கள் சிறந்த சேவை செய்து நகரத்தை முன்னேற்ற வேண்டும். திரு. ஏ. விஸ்வநாதன்: யாழ். சுதந்திரக் கட்சித் தலைவர் என்ற முறையில் கூட்டரசாங்கத்தின் ஆதரவாளனுவதால் மேயர் தெரிவில் ஆதரித்தேன். நடுநிலைமை வகித்து சகல வட்டார வேலைகளையும் பூர்த்தி செய்வீர்கள் என நம்புகிறேன்.

டாக்டர் ஏ பிரகாம்: றெக்கிளமேசன் வீடமைப்புத் திட்டத்தில் கவனம் செலுத்தவேண்டும். கடந்த கால அனுபவங்களைக் கொண்டு நகரை முன்னேற்ற உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 12-ம் திகதி (25-4-71)

மேஷம்- மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். தெய்வநம்பிக்கை நன்று.

ரிஷபம்- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சிலர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும்.

மிதுனம்- மனையில் பூசல்கள் தோன்றிமறையும். தனிமையை விரும்புவீர்கள். அறவழி நாட்டம் உண்டு.

கடகம்- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

சிம்மம்- இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்கான கருவி கிடைக்கும்

கன்னி- எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். தொழில்புரியும் இடத்தில் தொல்லைகள் முளைக்கக் கூடும்.

துலாம்- அரும்பிய காதல் இன்று கரும்புபோல் சுவைக்கும் பாரீர் விரும்பிய எண்ணம்போல் நல்லவை நடக்கும் காணீர்.

விருச்சிகம்- முன்னேற்றத்தில் தடைஏற்படும் சிறுபிணி வாட்டும், ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

தனுசு- பிறருக்கு உதவுவதில் முன் நிற்பீர்கள். இதன்மூலம் பணமும் செலவாகும். அரசில்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

மகரம்- கற்றதனுல் பயன் இன்று கட்டாயம் கிட்டும் அறிஞர்கள் போற்றுவர். ஆதரவு பெருகும்.

கும்பம்- நீண்டநாள் கொடுக்கல்வாங்கல் இன்று நிவர்த்தியாகும், சுற்றாடலில் மதிப்பு உயரும். பெரிய மனிதர்களின் ஆதரவுபெருகும்.

மீனம்- பொருள்முடை தென்படும்; கடன்பட நேரிடும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியாது போகலாம்.


சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## 69—70 அதிக வருமானம்

கோட்டை, சனி

1969-70-ம் ஆண்டுக்கான வரி 23 கோடி 20 இலட்சம் ரூபாவால் அதிகரித்துள்ளது என்று அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரத்தில் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உப தபாலதிபராக நியமனம்



எழுதுமட்டுவாள், சனி கைதடி உபதபாலதிபராக திரு. ச. திருலோகசிங்கம் நியமனம் பெற்றுள்ளார் இம்மாதம் 6-ம் திகதி தொடக்கம் இவர் தமது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். இவர் மறவன்புலோ சகலகலாவல்லிவித்தியாசாலை, கைதடி வி. எம். எஸ். பாடசாலை, யாழ். கூட்டுறவுப்பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

— —

## இன்று குளிர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று நண்பகல் குளிர்த்தி உற்சவம் நடைபெறுகிறது.

## மூதூரில் தொண்டர்படை திரண்டது

மூதூர், வெள்ளி

மூதூர் முதல் எம். பியும் தகவல் ஒலிபரப்பு உதவி அமைச்சருமான திரு ஏ. எல். அப்துல் மஜீத் தமது தொகுதியில் தொண்டர்களைத்திரட்டி சினன்வாடி பொலிஸ் நிலையத்தைப் பாதுகாத்தார். கிளர்ச்சிக்காரர்களின் நடவடிக்கைகளைக் கேள்விப்பட்டதும் திரு. மஜீத் இவ்விதநடவடிக்கையில் உடனடியாக ஈடுபட்டார். கந்தாளைப் பொலிஸ் நிலையத்திலும் தொண்டர்படையினர் காவல் புரிகின்றனர்.

மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஐ. பி. மீடின், உதவி அமைச்சர் ஆகியோர் மூதூர் தொகுதியில் தொண்டர்படையைத் திரட்டி உணவுப்பொருட்கள் போன்றவற்றை விநியோகம் செய்வதில் அவர்களை ஈடுபடுத்தியுள்ளனர்.

கிளர்ச்சிக்காரர்களின் நடவடிக்கைகளினுல் நாடு மிகவும்பாதிக்கப்பட்டிருந்த இக்கட்டான நிலையில்தொண்டர்படையினர் ஏராளமாகச் சேர்ந்து அரசாங்கத்துக்கு உதவிசெய்துள்ளமனப்பான்மையை உதவி அமைச்சர் பாராட்டியுள்ளார்

## நிவாரண நிதிக்கு நன்கொடை

யாழ்ப்பாணம், ஞாயிறு பொலிஸ் பாதுகாப்புப் படைகள் நிவாரண நிதிக்கு ஐக்கிய சோஷலிச முன்னணி ஊர்காவற்றுறைத் தொகுதிக் கிளை இணைச் செயலாளர் திரு க துளசிாமணி 75ரூபா வழங்கியுள்ளார். தமது சம்பளத்தில் 20சதவிகிதமான இத்தொகையை கழித்து மேற்படி நிதிக்கு அனுப்பி வைக்குமாறு வவுனியா அரசாங்க அதிபர் திரு என். டி. ஜெயவீராவைக் கேட்டுள்ளார். வவுனியாக் கச்சேரியில் கடமையாற்றும் திரு துளசிாமணி ஓர் எழுதுவினைஞராவர்.

## உடனடி நெல் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஞாயிறு களங்களில் நெல்லை வெட்டிச் சூடுமிரித்து பாதுகாப்பின்றி வைக்க வேண்டாமென்றும் உடனுக்குடன் நெல்லைக் கொள்வனவுசெய்ய கூட்டுறவுச் சங்கங்கள் தயாராய் இருப்பதாகவும் கரைச்சிப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பரந்தன், கண்டாவளை, குமரபுரம் முரசுமோட்டைஆகிய இடத்துக் களக்காரர்களுக்கு அறிவித்துள்ளது.

## விவசாயிகளுக்கு சேமலாபநிதி

கோட்டை, வெள்ளி

விவசாயிகளுக்கும் 'சேமலாபநிதி' திட்டத்தை விரைவில் அமுல் செய்ய கமத்தொழில் காணி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான ஆரம்பவேலைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒருவிவசாயியின் மொத்த வருமானத்தில் குறித்த அளவு மையமாக வைத்து சேமலாபநிதித் தொகை கணிக்கப்படும் அந்தத் தொகை ஒவ்வொருமுறையும் அரசாங்கம் கொள்முதல்செய்யும்நெல்மொத்த விற்பனையில் கழிக்கப்படும். இக்கழிவை நெல்விற்பனவுச் சபை செய்யும்.

## தபால், தந்தி சேவை சகஜ நிலைக்குத் திரும்புகிறது

கோட்டை, வெள்ளி

தபால் தந்தி சேவை சகஜ நிலைக்கு திரும்புவதாகத் தபால் அமைச்சைச் சேர்ந்த ஓர் உயர் அதிகாரி தெரிவித்தார்.

பல பகுதிகளில் வான் மூலம் தபால் விநியோகம் செய்யப்படுவதாகவும், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை ஆகிய பகுதிகளுக்கு விமானமூலம் தபால்கள் அனுப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தந்திகள் இப்போது சகல பகுதிகளுக்கும்ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும், வெளிநாட்டுக்கடிதங்கள் வழமைபோல் நேரகாலத்துக்கு அனுப்பப்படுவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாண சாரணர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாண மாவட்ட சாரணர் சங்க வருடாந்தக் கூட்டம் அண்மையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தலைமையில் நடைபெற்றது.

யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்' யாழ் மாவட்ட அரசாங்க அதிபர். உபதலைவர்கள்: மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ ஏ யோசேப், திரு ஜே எம் சபாரத்தினம் முகாந்திரம் இ பொ இராசையா, திரு எஸ் அரியரத்தினம், செயலாளர்: திரு ஆர் வில்லியம்ஸ், பொருளாளர்: திரு சி எஸ் சுப்பிரமணியம்

13 பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டதோடு எண்பார்வையாளரின் அறிக்கை புதிய நிர்வாகசபையால் பரிசீலிக்கப்பட்டு விசேஷ கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நாம் பிரார்த்தனை செய்வதைப்போலவே வேலை செய்வோமாக; ஏனெனில் உழைப்பே உடல் இறைவனுக்குச் செலுத்தும் மிகச் சிறந்த பிரார்த்தனையாம். ஸ்ரீ அன்னை.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 12 - ந் திகதி ( 25 - 4 - 71)

# வேறு வழியில்லை

ஜனநாயக வாழ்க்கை அமைப்பு முறையைப் பாதுகாப்பதற்கு பிரதம மந்திரியும், எதிர்க்கட்சித் தலைவரும் திட்டவட்டமான முறையில் உறுதியளித்திருப்பது சுபசகுனமாகும் வன்முறையினுல் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கைக்கு இவர்களின் உறுதியும் தெளிவும் சாவு மணி அடிப்பதாக அமைந்திருக்கிறது. 'அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் வேறு வழியில்லை' என்று திரு. ஜயவர்த்தன கூறியிருக்கிருர். ஆட்சிமன்றத்தில் அவர் மிகச் சுருக்கமாக ஆனுல் ஆணித்தரமாக அளந்துகூறிய வார்த்தைகள் அரசாங்கத்தினதும் மக்களினதும் தன்னம்பிக்கையையும் கட்டுப்பாட்டையும் அதிகரிக்க உதவுவதாகவும் உணர்த்துவதாகவுமுள்ளது.

ஜனநாயக அமைப்பில் அரசியல் வளர்ச்சி முறை இழுபறிப்பட்டதாகத் தோன்றினுலும் அது கைக்குண்டு ஆட்சியைவிட மேலானது' என்று பிரதமர் சற்றுக்கண்டனமாகக் குறிப்பிட்டிருந்தாலும் ஜனநாயகவாழ்க்கை அமைப்பின் முக்கியத்துவத்தைச் சரியாக எடுத்துக் காட்டியிருக்கிருர். அதுமட்டுமல்ல கைக்குண்டுகளினுல் நாட்டில் தோற்றுவிக்கப் பட்டுள்ள பயங்கரமான நிலைமையை எதிர்த்து அரசாங்கம் வெற்றிகரமாகப் போராடி வருவதையும் பாராட்ட வேண்டும்.

நாட்டுமக்களுக்குப் பிரதமர் விடுத்துள்ள வேண்டுகோள் ஆணித்தரமானது. சகல அம்சங்களும் அலசி ஆராயப்பட்டது. பேச்சில் நடையில் ஆண்மை நிறைந்தது என்று வர்ணிப்பதுடன் தவருன வழியில் செல்லும் தனது பிள்ளைகளைக் கண்டுமனம் குமுறும் ஒருதாயின் நிலையையும் அதில் காணக்கூடியதாக இருக்கிறதென்று சொல்லவேண்டும்.

நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைவர் என்றமுறையில் பயங்கரவாதிகளுக்கு இரண்டு மாற்றுவழிகளைப் பிரதமர் தெரிவித்திருக்கிருர் 'நீங்கள் பதுங்கியிருக்கும் இடங்களிலிருந்து வெளியேவந்து சரணடையுங்கள். இல்லையேல் உங்களுக்கெதிராக நான் படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் 'என்பது பிரதமரின் நிபந்தனையுடன் கூடிய எச்சரிக்கை. நாட்டின் அமைதியும் முன்னேற்றமும் சீரான வாழ்வும் ஆபத்தான கட்டத்திலிருக்கிறது. இந்நிலையில் பிரதமர் சும்மா இருக்கவேண்டுமென யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள்; எதிர்பார்கவும் முடியாது.

பயங்கரவாதிகள் சரணடைந்தால் அவர்கள் விஷயத்தில் நியாயமாக நடப்பதாகவும் பிரதமர் உறுதியளித்திருக்கிருர். சரணடைந்தபின் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்கள் பற்றி அவர் குறிப்பிட்டிருப்பது அவர் நியாயமாக நடந்து கொள்வார் என்பதற்கு ஆதாரமாகவிருக்கிறது.

பயங்கர வாதிகளின் இயக்கம் ஆரம்பத்திலிருந்ததுபோல் இன்று இல்லை. பலஇடங்களிலும் அவர்கள் தோல்வியைத் தழுவுகிருர்கள். நிலை தளர்ந்துவருகிறது; இந்நிலையில் அவர்கள் தங்கள் நலனையும் நாட்டின் நலனையும் கருத்திற்கொண்டு பயங்கரவழியைக் கைவிட்டு திரும்பி வந்து சரணடைவது தான் நியாயம் என்பதை உணர வேண்டும்.

மக்கள் தம்மிடம் ஒப்படைத்த பொறுப்பையும் கடமையையும் தட்டிக்கழித்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபடாமலும் நூற்றுண்டுகளாகப் போற்றிப் பேணி வந்த நாகரிகத்தை அழியவிடவும் பிரதமர் காரணமாக இருப்பாரா? இருக்கத்தான் முடியுமா? கடந்த இரண்டொரு வாரங்களுக்குள்ளேயே நாட்டு மக்கள் பெருந்துன்பங்களுக்காளாகியுள்ளனர், பல உயிர்கள் பலியாகியிருக்கின்றன. பிரதமர்விடுத்துள்ள இந்தக் கடைசி வேண்டுகோளுக்கும் பயங்கரவாதிகள் செவிசாய்க்கவில்லையெனில், அவர்கள் தங்கள் மீதும் தங்களுக்கு இந்த வழிகளைக் காட்டிக் கொடுத்தவர்கள் மீதுமே பழி சொல்லவேண்டுமேயன்றி வேறுயார்மீதுமல்ல!

தங்கள் சகோதரர்களையே தங்கள் சகோதரர்கள் கொன்று குவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதைப் பிரதமர் தமது அறிக்கையில் நெஞ்சம் தொடும்படி கூறி "ஒழிகடையை" மூடிவிட்டுத் திரும்பும்படி கேட்டிருப்பது அவர்களின் கண்களைத் திறக்க உதவவேண்டும். இதே சமயம் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவும் "எங்கள் சகோதர, சகோதரிகள் மேலும் மாண்டுமடிவதைத் தடுப்பதற்கு ஒன்று சேர்ந்து உழைப்போம்" என்று ஒற்றுமைக்கரம் நீட்டியது அரசுக்கும் நாட்டுக்கும் நம்பிக்கையளிப்பதாகும்.

இருள் சூழ்ந்துள்ள இன்றைய கட்டத்தில் மிகப் பொறுமையுடன் தமது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து நடக்கும் நாட்டு மக்களுக்குப் பிரதமர் நன்றியும் பாராட்டும் தெரிவித்திருக்கிருர் தனது காலஞ்சென்ற கணவரின் சோஷலிசக் கொள்கைகளைக் கைவிடவோ, துரோகம் செய்யவோ போவதில்லையென்றும் உறுதியளித்துள்ள பிரதமர் கஷ்டங்கள், ஆபத்துக்களை எதிர்த்து நின்று சமாளித்து கடும் உழைப்புக்குத் தயாராகுமாறு கேட்டுள்ளார்.

மக்கள் தான் நாட்டின் செல்வம்; அரசியலும் அரசியல் வாதிகளுமல்ளர், அரசியல் வாதிகள் தமது கட்சிகளின் நலனுக்காக நாட்டின் நலனை எப்போதோ தியாகம் செய்து விட்டார்கள், மக்களுக்குப் பிரதமர் இப் [illegible] வேண்டுகோள் இனியும் வீணபோக முடியாது.

# சரணடையாவிட்டால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும். பாலங்களையும் தகர்ப்பதோடு தொலைபேசித் தொடர்பையும் துண்டித்து வருகின்றனர் பாதுகாப்புப் படைகளுடன் நேர்நின்று மோதமுடியாமையால் இப்பொழுது பயங்கரவாதிகள் மறைந்திருந்து தாக்கி வருவதினுல் பெருந்தொகையானேர் கொல்லப்படுகின்றனர் இதனுல் இளைஞர்கள் கடத்தப்படுகிருர்கள். சில நாட்களாக இவ்வியக்கத்திலிருந்த இளைஞர்கள் தங்கள் சீருடைகளைக் கைவிட்டு, கிராமப்புறங்களுக்குச் சென்று தஞ்சம்புகுகின்றனர். இப்படித்தஞ்சம் புகுந்தவர்களை கிராமப்புற மக்கள் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்துவருகின்றனர்' இன்னும் சில பயங்கரவாதிகள் தாமாகவே சரணடைந்து வருகின்றனர். இதுவரை 3 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் தினமும் காவலில் வைக்கப்படுகின்றனர்.

## 5ம் திகதி சம்பவம்

ஏப்பிரல் 5ந் திகதி நடைபெற்ற சம்பவங்களை இராணுவ ரீதியில் தடுக்க நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எமது நாட்டின் மீது சர்வதேச ஆக்கிரமிப்பு நடைபெறுமென்ருே இவ்வித கிளர்ச்சிகள் நடைபெறுமென்ருே நாம் நினைக்கவில்லை அதனுல் இராணுவத்தை அதற்கேற்ப வைத்திருக்கவில்லை. கலகங்கள், உள்ளூர் கலகங்களை அடக்கக்கூட இராணுவத்தைநாம் தயாராகவைத்திருக்கவில்லை இதனுல் பயங்கரவாதிகளின் திடீர் தாக்குதல்களைச் சமாளிக்க போதிய ஆட்களையோ ஆயுதங்களையோ நாம்வைத்திருக்கவில்லை இதற்குமாருக நாட்டின் பொருளாதாரம் கைத்தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யவே நாம் நாட்டங்கொண்டிருந்தோம். இதில் நாங்கள் நாட்டம் செலுத்திக்கொண்டிருந்ததினுல் எம்மிடம் ஆயுதங்கள், வெடிமருந்துகள், விமானங்கள் போதியதாக இருக்கவில்லை

## நேசநாடுகளின் உதவி

எமது வேண்டுகோளுக்கு இணங்கி ஆயுத உதவி செய்த இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன், யூகோஸ்லாவியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபுக்குடியரசு ஆகிய நேசநாடுகளுக்கு நாங்கள் நன்றியுடையவர்களாய் இருப்போம். மேலும் எமக்கு உதவிசெய்ய விருப்பம் தெரிவித்த கனடா, ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளுக்கும் நாம் நன்றி செலுத்துகின்ருேம். மேற்சொன்ன நேசநாடுகளிடமிருந்து நாம் ஆயுத உதவிகளைப் பெற்ருேமேதவிர அந்நாட்டுப் படைகளை நாம் பயன்படுத்தவில்லை.

## யார் இந்தப் பயங்கரவாதிகள்?

இனி இந்தப் பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பதைப் பார்போம். உலக இடர்பாடுகளுக்குள் இடர்பட்டு தனிப்பட்ட பேராசைகளை வளர்த்துக்கொண்டவர்களும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளிலிருந்து விலக்கப்பட்டவர்களும் மனநிறைவு அற்ற பயங்கரவாதிகளுமே இவ்வியக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்,

வெளிநாடுகளிலிருந்து ஆயுத உதவியும் தார்மீக ஆதரவும் தமக்குத் தருவார்கள் என்று சொல்லி இளைஞர்களை நம்பச்செய்தார்கள். ஆனுல் இந்த வாக்குறுதிகளில் எவ்வித உண்மையுமில்லை என்பதை ஆராய்வின்பின் நான் திடமாக நம்புகின்றேன்,

## வெளிநாட்டு தூதரகம்

இலங்கையிலிருந்த ஒரு பிறநாட்டுத் தூதரகம் இவர்களுக்கு ஆயுத உதவியளிப்பதை நான் சுட்டிக்காட்டி இவ்விதம் செயல்படவேண்டாமென அவர்களுக்குத் தெரிவித்தேன். எனது வேண்டுகோளுக்கு அவர்கள் செவிசாய்க்காததினுல் வெளியேறுமாறு உத்தரவிட்டேன்.

எமது கூட்டுச் சேராக் கொள்கைக்குச் சிலர் தவருன அர்த்தம் செய்கிருர்கள் எமது நாட்டு உள்நாட்டு விவகாரங்களில் எந்த ஒருநாட்டையும் னுமதிக்க வேண்டுமென்பதில்லை. நாடு முழுவதும் பயங்கரவாதிகளின் வன்முறைகளை பாதுகாப்புப் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். அரசாங்கக் கட்டிடங்களையும் போக்குவரத்து வாகனங்களையும் பயங்கரவாதிகள் தாக்கும்போது விமானத் தாக்குதல்கள் நடத்த வேண்டி ஏற்பட்டது. பலர் கொல்லப்பட்ட நிலைமை இப்பொழுது மாறிவிட்டது இப்பயங்கரவாதிகள் ஒருநாள் புரட்சிமூலம் நாட்டின் அரசாட்சியை மாற்றநினைத்தார்கள்.

இவர்களுக்கு வெடிமருந்துகள் ஆயுதங்கள் பற்றுக்குறைகள் ஏற்பட்டிருப்பதினுலும், பல ஆயுதங்களை பாதுகாப்புப் படைகள் கைப்பற்றி யிருப்பதினுலும் தாங்கள் வைத்திருந்த வாகனங்களைக்கூட வீதியில்விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இராணுவத்தினரின் கூட்டு நடவடிக்கையினுல் இளைஞர்கள் பலியாகலாம். இந்நிலைமை மாற அதிக காலமாகாது. அரசாங்கம் நாட்டை ஆளுகிறது. உணவுப்பொருட்கள் நாட்டின் பல பாகங்களுக்கு விநியோகிக்கப்படவேண்டும். மக்களின் கஷ்டங்களுக்கு நாம் முடிவுகாணவேண்டும்

## இராணுவ நடவடிக்கை

இந்த நாட்டில் வாழும் சமாதானத்தை விரும்பும் 90 சத விதமான மக்களின் ஜனநாயக வாழ்வு முறையையும் நலமான வாழ்வையும் காப்பாற்ற நான் இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும். இராணுவம், பொலிஸ் கூட்டாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மக்களின் உதவி கிடைக்குமென நம்புகிறேன்

நான் இவ்விதமாக இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிடுவதற்கு முன்பாகப் பயங்கரவாதிகளை சரணடையுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சரணடைபவர்கள் மீதுவன் முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது

நாட்டின் சம்பவங்கள் பற்றிய விபரங்கள் பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கும் ஆட்சிமன்றஉறுப்பினர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. பயங்கரவாதிகளையும் அவர்களுடன்தொடர்புடையவர்களையும் தங்கள் வன்முறைச் செயல்களைவிட்டு சரணடையுமாறு வற்புறுத்திக்கேட்டுக்கொள்கின்றேன்

ஜனநாயகம் பொதுவாகவே செயல்படுகிறது. ஆனுல் துப்பாக்கியினுல் செய்யப்படும் ஆட்சியைவிட இது சிறந்ததாகும்.

சென்ற வருடம் மே மாதம் 27-ந் திகதி என்னை நீங்கள் தெரிவுசெய்தீர்கள். காலஞ்சென்ற எனது கணவர் திரு. எஸ். டபிள்யூ, ஆர் டி பண்டாரநாயக்காவின் கொள்கை வழியில் நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிக்கின்றேன். நாட்டிலுள்ள பிரச்னைகளை நானே எனது அமைச்சரவையோ உடனடியாகத் தீர்க்கமுடியுமென்று கருதவில்லை பயங்கரவாதிகள் 10 ஆண்டுகளுக்கு இந்நாடு கஷ்டப்படுமெனத் தங்கள் நடத்திய வகுப்புகளில் சொல்லிவந்திருக்கிருர்கள். மக்கள் அவ்வளவு காலம் தியாகம் செய்யவேண்டுமென்று நாம் கேட்கவில்லை. இராணுவத்தை தயாரற்ற நிலையில் வைத்திருக்க உத்தேசமில்லை பயங்கரவாதிகளினுல் சீர்குலைக்கப்பட்ட தந்தித்தொடர்பு, மதகுகள் பாலங்கள், வாகனப் போக்குவரத்து வீதிகள் ஆகியவற்றை சீர் திருத்த லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவிடவேண்டியுள்ளது. இதனுல் அபிவிருத்தி வேலைகளுக்குச் செலவிடமுடியாமலிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களின் புனர் வாழ்வுக்கு உதவி செய்யவேண்டியுள்ளது.

இந்நாட்டைப் பாதுகாத்துவரும் இராணுவத்தினரையும் பொலிசாரையும் பாராட்டுகிறேன் பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்குள்ளானமரணமடைந்தோர்களின் குடும்பங்களின் நிலைகுறித்து என் இதயத்தில் கவலை பொங்குகிறது.

தற்காலிக நிலைமைகளை நீக்கக் கூடிய பலமும் தன்நம்பிக்கையுமுடைய மக்களிடம் எனக்குநம்பிக்கை இருக்கிறது. எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கின்றேன்

## இந்திய மந்திரிசபையில் ஸி, சுப்பிரமணியம்

புதுடில்லி ஏப்

இந்திய மத்திய அரசின் திட்டமந்திரியாக திரு சி சுப்பிரமணியம் இன்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் திட்டமிடல் பொறுப்புகளை இதுவரை ஸ்ரீமதி இந்திராவே நிர்வகித்து வந்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**விற்பனையாளர் தேவை**

மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களில் "ஈழநாடு" பத்திரிகை விற்பனை செய்ய விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் உடன்நேரில்தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, "ஈழநாடு", யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org